<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 107/2025 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ராஜா |
| **Father/Husband' Name** | ~ | சுப்பிரமணியன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 13.05.2026.**</u>

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து செக்யூரிட்டியாக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.அ.சா.1 ஈஸ்வரி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி முறையிடப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீடு எங்கு உள்ளது என்றால் நேரு தெருவில் உள்ளது. எனது மனைவி பெயர் என்ன என்றால் ஜோதி. அவர் எங்கு உள்ளார் என்றால் என்னுடன் தான் வசித்து வருகிறார். அவர் வேலை செய்து வருகிறாரா என்றால் ஆமாம். இவ்வழக்கின் எதிரி மணி எனது ஊரைச் சேர்ந்தவர்களா என்றால் ஆமாம்.எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக வழக்கில் உண்மையை மறைத்து

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல வழக்கு சம்பந்தமாக உண்மையில் எனக்கு எதுவும் தெரியாது.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**

District Munsif-cum

Judicial Magistrate

Pallavaram.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 107/2025 |
| Prosecution: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | தனசேகர் |
| **Father/Husband' Name** | ~ | சுப்பிரமணியன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 13.05.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து எலக்ட்ரீஷியனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது அண்ணன். எனது வீட்டிற்கு பின்னால் கிறிஸ்தவர் ஒருவர் உள்ளார். அவரது வீட்டில் பிரச்சினை ஏற்பட்டிருந்ததாக எனது மனைவி என்னிடம் சொன்னார். அ.சா.1 ஈஸ்வரி என்பவரை தெரியாது. எதிரிகள் மணி, சோனா, ராஜேந்திரன், வெங்கடேசன் ஆகியோர்கள் எனது ஊர்காரர்கள். எனது வீட்டிற்கு பின்புறத்தில் எதிரி மணி என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது. அது அவரது அப்பாவின் சொத்தாகும். அந்த இடம் தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி முறையிடப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் எதிரிகள் எனது ஊர் காரர்கள் என்றாலும் எனது வீட்டின் பின்னால் உள்ள இடமானது எதிரி மணி என்பவருக்கு சொந்தமான இடம் என்றாலும் அந்த இடத்தை ஈஸ்வரி என்பவருக்கு தொகையை பெற்றுக் கொண்டு விற்பனை செய்து விட்டு கிரைய தொகையை பெற்றுக் கொண்டு விட்டு இடத்தையும் கொடுக்காமல் காசையும் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றி உள்ளார்கள் என்றாலும் அது தொடர்பாக மேற்படி நபர்கள் ஈஸ்வரி என்பவர் சண்டை போட்டார்கள் என்றாலும் அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரிந்திருந்தும் அதனை மறைத்து எதிரிகள் எனது ஊர் காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி மொழிகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 107/2025 |
| Prosecution: | அ.சா.4 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | செந்தில்குமார் |
| **Father/Husband' Name** | ~ | கோவிந்தசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 13.05.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பொழிச்சலூரில் குடியிருந்து டிங்கரிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் பொழிச்சலூரில் இருந்து சங்கர் நகர் சென்றுகொண்டிருந்தேன். அப்போது எதிரி மணி என்பவர் சங்கர் நகர் காவல் நிலையத்தில் இருந்தார். அப்போது போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். கையொப்பம் செய்து கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி மணியை காவல் நிலையத்தில் தான் பார்த்தேன் என்றால் சரிதான். பொழிச்சலூர் பேருந்து நிறுத்தம் அருகே காவல்துறையினர் எதிரி மணியை பிடித்து வைத்திருந்ததாக நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில்

வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும் நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என எனக்கு தெரியாது என்றாலும் போலீசார் முன்னிலையில் எதிரி மணி என்ன ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.